## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006

## மார்ச் /ஏப்ரல் 2018,மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளல் மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்

## செய்திக் குறிப்பு

மார்ச் / ஏப்ரல் 2018, மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாட்களின் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **19.06.2018 அன்று பிற்பகல் 2.00 மணி** முதல் **scan.tndge.in** என்ற இணையதளத்திற்குச் சென்று தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்தபிறகு மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால் இதே இணையதள முகவரியில் Application for Retotalling / Revaluation என்ற தலைப்பினை Click செய்து தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து **20.06.2018 முதல் 22.06.2018 வரையிலான தேதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

ஒம்/–
**இயக்குநர்**

**நாள்:**18 .06.2018
**இடம்:** சென்னை – 6